பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

25 05 2025 **SUNDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தீவிரவாதத்திற்கு முடிவுகட்ட வேண்டும் என்பதே நாட்டு மக்களின் உறுதிப்பாடாக உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. தேசிய ஜனநாயக கூட்டணி ஆளும் மாநில முதலமைச்சர்கள் மற்றும் துணை முதலமைச்சர்கள் கூட்டம் பிரதமர் தலைமையில் தற்போது புதுதில்லியில் நடைபெற்று வருகிறது.

3. உலக அளவில் தென் பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்தும் விதமாக ஆப்பிரிக்க நாடுகளுடன் இந்தியா நட்புறவை பேணி வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்

4. குஜராத், கேரளா, பஞ்சாப், மேற்குவங்கத்தில் உள்ள ஐந்து சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அடுத்த மாதம் 19-ஆம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் சென்னை – குஜராத் அணியையும், கொல்கத்தா – ஹைதராபாத் அணியையும் எதிர்கொள்கின்றன.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

**<<<<<>>>>>>**

தீவிரவாதத்திற்கு முடிவுகட்ட வேண்டும் என்பதே நாட்டு மக்களின் உறுதிப்பாடாக உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்துபேசும் மன்கிபாத் நிகழ்ச்சியில் பேசிய அவர், ஆபரேஷன் சிந்தூர், தீவிரவாதத்திற்கு எதிரான போரில் புதிய நம்பிக்கையை அளித்திருப்பதாக கூறினார்.

***<u>Sound Byte – பிரதமர் (1) – 22 Sec.</u>***

ஆபரேஷன் சிந்தூர் வெற்றியை கொண்டாடும் விதமாக, நாடெங்கும் மூவர்ண கொடி பேரணி நடத்தப்பட்டு வருவதாக பிரதமர் குறிப்பிட்டார்.

ஆபரேஷன் சிந்தூர் நாட்டு மக்களிடம் பலமான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாக அவர் கூறினார்.

**_Sound Byte – பிரதமர் (2) –38 Sec._**

சத்தீஸ்கரில் உள்ள தண்டேவாடா மாவட்டத்தில் பொதுத் தேர்வு முடிவுகள் மிக சிறப்பாக அமைந்துள்ளது தமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

**_Sound Byte – பிரதமர் (3) – 42 Sec._**

வடகிழக்கு உச்சிமாநாட்டில் கலந்துகொண்டபோது, சிக்கிம் மாநிலத்தை சேர்ந்த **'Crafted Fibers** பற்றி தமக்கு தெரியவந்ததாக பிரதமர் கூறினார்.

உள்ளூர் மக்களை சுயசார்பு கொண்டவர்களாக மாற்றுவதில் இது முக்கிய பங்கு வகிப்பதாக அவர் தெரிவித்தார்.

**_Sound Byte – பிரதமர் (4) – 55 Sec._**

யோகா தினம் அடுத்த மாதம் 21-ஆம் தேதி கொண்டாடப்பட உள்ள நிலையில், சுவாரஸ்யமான வழிமுறைகளுடன் அதில் பங்கேற்பது குறித்து மக்கள் சிந்திக்க வேண்டும் என்று திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டார்.

**_Sound Byte – பிரதமர் (5) – 51 Sec._**

பிரதமர் ஆற்றிய உரையின் தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பு செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

**<<<<<>>>>>>**

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆளும் மாநில முதலமைச்சர்கள் மற்றும் துணை முதலமைச்சர்கள் கூட்டம் தற்போது புதுதில்லியில் நடைபெற்று வருகிறது.

இன்று நாள் முழுவதும் நடைபெறும் இக்கூட்டத்தில், நல்லாட்சி தொடர்பாக விவாதிக்கப்படுகிறது.

பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா, மத்திய உள்துறைஅமைச்சர் திரு அமித் ஷா, பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் உள்ளிட்ட தலைவர்கள் இதில் பங்கேற்றுள்ளனர்.

தேசிய ஜனநாயக கூட்டணியை சேர்ந்த 20 முதலமைச்சர்கள், 18 துணை முதலமைச்சர்கள் பங்கேற்றுள்ள இக்கூட்டத்தில் ஆபரேஷன் சிந்தூர் வெற்றி மற்றும் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை மேற்கொள்ளும் நடவடிக்கை தொடர்பான இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் என்று பிஜேபி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

<<<<<>>>>>>

உலக அளவில் தென் பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்தும் விதமாக ஆப்பிரிக்க நாடுகளுடன் இந்தியா நட்புறவை பேணி வருகிறது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஆப்பிரிக்க தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

ஆப்பிரிக்க நாடுகளுக்கு தமது வாழ்த்துகளை தெரிவித்துள்ள திரு ஜெய்சங்கர், பரஸ்பர மரியாதை மற்றும் பொதுவான லட்சியங்களின் அடிப்படையில் இருதரப்பு உறவு அமைந்துள்ளதாக கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

குஜராத், கேரளா, பஞ்சாப், மேற்குவங்கத்தில் உள்ள ஐந்து சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் அடுத்த மாதம் 19-ஆம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக, தேர்தல் ஆணையம் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இத்தொகுதிகளில் நாளை வேட்புமனு தாக்கல் தொடங்கும் என்றும், வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை அடுத்த மாதம் மூன்றாம் தேதி நடைபெறும் என்றும், மனுக்களை திரும்பப்பெறுவதற்கான கடைசிநாள் ஐந்தாம் தேதி என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 23-ஆம் தேதியன்று மேற்கொள்ளப்படும் என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

<<<<<>>>>>>

ஆப்பரேஷன் சிந்தூர் குறித்தும், தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை எடுத்துரைக்கும் வகையிலும் மத்திய அரசு நியமித்த காங்கிரஸ் கட்சியை சேர்ந்த திரு சசிதரூர் தலைமையிலான அனைத்துக்கட்சி குழுவினர் நியூயார்க்கில் அமெரிக்க கல்வியாளர்கள், பத்திரிகையாளர்கள், சிந்தனையாளர்கள் குழுவை சந்தித்து பேசினர்.

பாகிஸ்தானுடன் போரிட இந்தியா விரும்பவில்லை என்றும், 21-ஆம் நூற்றாண்டை எதிர்கொள்ளும் வகையில், நாட்டுமக்களின் முன்னேற்றத்தையும், அவர்களது பொருளாதாரத்தையும் மேம்படுத்துவதையே இந்தியா விரும்புவதாகவும் அவர்களிடம் திரு சசிதரூர் எடுத்துரைத்தார்.

இந்தியா வசமுள்ள பகுதிகளை தீவிரவாதத்தின் மூலமாக பாகிஸ்தான் கைப்பற்ற முயல்வதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று திரு சசி தரூர் தெரிவித்தார்.

கத்தார் சென்றடைந்த தேசியவாத காங்கிரஸ் கட்சியை சேர்ந்த திருமதி சுப்ரியா சுலே தலைமையிலான குழுவினரை, அந்நாட்டுக்கான இந்திய தூதர் திரு விபுல் வரவேற்றார்.

திமுக-வை சேர்ந்த திருமதி கனிமொழி தலைமையிலான குழுவினர் ரஷ்ய பயணத்தை முடித்துக்கொண்டு இன்று ஸ்லோவேனியா சென்றுள்ளனர்.

ஐக்கிய ஜனதாதளத்தை சேர்ந்த திரு சஞ்சய் குமார் ஜா தலைமையிலான குழுவினர் தென்கொரியாவின் சியோல் நகரை சென்றடைந்தனர்.

தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை தென்கொரிய பிரதிநிதிகளிடம் அவர்கள் எடுத்துரைக்க உள்ளனர்.

சிவசேனாவை சேர்ந்த திரு ஸ்ரீகாந்த் ஷிண்டே தலைமையிலான குழு காங்கோவுக்கும், திரு பைஜெயந்த் பாண்டா தலைமையிலான குழு பக்ரைனுக்கும் சென்றுள்ளது.

பிஜேபி-யை சேர்ந்த திரு ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான குழு பிரான்ஸ், பிரிட்டன், ஜெர்மனி, இத்தாலி நாடுகளுக்கு இன்று புறப்பட்டு சென்றது.

முன்னதாக, செய்தியாளர்களிடம் பேசிய திரு ரவிசங்கர் பிரசாத், ஒட்டுமொத்த நாட்டு மக்களின் எண்ணங்களை பிரதிபலிப்பதாக இக்குழு உள்ளது என்றும், நாட்டின் நிலைப்பாட்டை உலகிற்கு இக்குழு எடுத்துரைக்கும் என்றும் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் சென்னை அணி – குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

அகமதாபாதில் இப்போட்டி பிற்பகல் மணி 3.30-க்கு தொடங்குகிறது.

தில்லியில் நடைபெறவுள்ள மற்றொரு போட்டியில் கொல்கத்தா – ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

<<<<<>>>>>>